இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 59– திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 22 – செவ்வாய்க்கிழமை 08 அக்டோபர் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 59 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 22 - Tuesday 08 October 2024 - Dak 12 Pages ₹ 5.00

## உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட

# காவல்துறைக்கு 56.27 கோடி ரூபாயில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.10.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 56 கோடியே 26 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 169 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்களையும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், 18 கோடியே 78 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 10 குடியிருப்புகள் மற்றும் 7 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையக் கட்டடங்களையும் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 3 கோடியே 75 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடய அறிவியல் மரபணு ஆய்வகப் பிரிவுக் கட்டடத்தையும் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக இயக்குநர் சந்தீப் ராய் ரத்தோர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், தடய அறிவியல் துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் வி. சிவப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, அக். 8 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.10.2024) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 56 கோடியே 26 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 169 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்களையும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், 18 கோடியே 78 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 10 குடியிருப்புகள் மற்றும் 7 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையக் கட்டடங்களையும் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 3 கோடியே 75 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடய அறிவியல் மரபணு ஆய்வகப் பிரிவுக் கட்டடத்தையும் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

காவல்துறை என்பது குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றிவரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறுத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

**இவ்வரசு பொறுப்பேற்ற இம்மூன்று ஆண்டு காலத்தில் காவல் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்**

காவல் துறையின் பணிகள் சிறக்க, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை, ரூ.461.62 கோடி செலவில் 2786 காவலர் குடியிருப்புகள், ரூ.55.04 கோடி செலவில் 47 காவல் நிலையக் கட்டடங்கள், ரூ.98.91 கோடி செலவில் 16 காவல்துறை இதரக் கட்டடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் ரூ.55.19 கோடி மதிப்பிலான 253 குடியிருப்புகள் ஆகியவை காவல் துறையினரின் மேம்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் காவல்துறை சார்பில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்**

கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவிலில் 22 கோடியே 8 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 128 காவலர் குடியிருப்புகள், புதுக்கோட்டை மாவட்டம் - மழையூரில் 5 கோடியே 48 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 29 காவலர் குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் - பள்ளத்தூரில் 2 கோடியே 24 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 காவலர் குடியிருப்புகள், என 29 கோடியே 81 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 169 காவலர் குடியிருப்புகள்;

இராமநாதபுரம் மாவட்டம் - இராமேஸ்வரம் துறைமுகம் பகுதியில் 99 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம் மற்றும் திருப்பூர் மாவட்டம் - வீரபாண்டியில் 1 கோடியே 97 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம், என 2 கோடியே 97 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல் நிலையக் கட்டடங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் - ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக வளாகத்தில் 10 கோடியே 27 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த இணையதள குற்ற ஆய்வக வளாகம் மற்றும் திருப்பூர் மாவட்டம் - திருப்பூரில் 13 கோடியே 20 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாநகர காவல் ஆணையர் அலுவலகம், என 23 கோடியே 48 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 காவல் துறைக் கட்டடங்கள்;

**என மொத்தம் 56 கோடியே 26 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்**

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவைக்கு 5 நியமன எம்.எல்.ஏ.க்கள் !

# துணைநிலை ஆளுநரின் முடிவு ஜனநாயக விரோதமானது !

## ஆளுநரின் முடிவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு !

*புதுடெல்லி, அக்.8-*

*புதுச்சேரியைப் போன்று ஜம்மு - காஷ்மீரில் 5 எம்.எல்.ஏக்களை நியமிக்க துணைநிலை ஆளுநர் முடிவு செய்துள்ளது ஜனநாயக நடைமுறைக்கு எதிரானது என காங்கிரஸ் விமர்சித்துள்ளது.*

*2019 ஆம் ஆண்டு ஜம்மு - காஷ்மீரின் 370 வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டு, 2 யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது. அப்போது கொண்டு வரப்பட்ட ஜம்மு - காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம் கடந்த ஆண்டு திருத்தப்பட்டது. அதன்படி 5 எம்.எல்.ஏ.க்களை ஆளுநர் நியமிக்க வழிவகை செய்யப்பட்டது. இரண்டு பெண்கள், புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பேர், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் அகதிகளில் இருந்து ஒருவர் என்று ஐந்து பேரை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டது.*

*அண்மையில் நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், 5 எம்.எல்.ஏக்களை நியமிக்கும் நடவடிக்கையை ஆளுநர் தொடங்க உள்ளதாக தெரிகிறது. நியமன எம்.எல்.ஏக்களுக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளதா, இல்லையா என்பது சட்டத்தில் வெளிப்படையாக கூறப்படவில்லை. ஆனால், வாக்களிக்கும் உரிமை உள்ளதாக பா.ஜ.க. கூறி வருகிறது.*

*சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் சூழ்நிலைகளில் இந்த ஐந்து பேரின் வாக்கு பா.ஜ.க.வுக்கு ஆதரவாக இருக்கும் என்று காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் அச்சம் தெரிவித்துள்ளன. 90எம்.எல்.ஏக்கள் மட்டுமே உள்ள சட்டப்பேரவைக்கு 5 நியமன எம்.எல்.ஏக்களை ஆளுநர் நியமிப்பது ஜனநாயக நடைமுறைக்கு எதிரானது என காங்கிரஸ் உள்ளிட்ட 'இந்தியா' கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.*

## போதைப் பொருட்களுக்கு எதிரான

# கழக அரசின் தீவிர நடவடிக்கையை கொச்சைப் படுத்துவதா?

## ஆளுநருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

**சென்னை, அக். 8-**

**"அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீது போதைப்பொருள் வழக்கிற்கு அனுமதி கொடுக்காமல் இழுத்தடித்த தமிழ்நாடு ஆளுநர், தி.மு.க. அரசின் போதைப் பொருட்களுக்கு எதிரான தீவிர நடவடிக்கைகளை கொச்சைப்படுத்தலாமா?" என்று ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சங்கரன்கோவிலில் நடந்த கூட்டத்தில் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள், "தமிழ்நாடு போலீசார் ஒரு கிராம் கூட இரசாயன போதைப் பொருட்களைப் பறிமுதல் செய்யவில்லை. கடந்த 3 ஆண்டுகளில் கஞ்சாவை மட்டுமே பிடித்துள்ளனர்" என்று வழக்கம் போல் அபாண்டமான குற்றச்சாட்டை சுமத்தியிருப்பதற்குக் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆளுநர் பதவிக்கு இழுக்கு தேடி வருவது கவலையளிக்கிறது!**

ஆளுநர் மாளிகைக்குள்ளும் வெளியேவும் அரசியல் பேசுவதையும் - அவதூறுகளை அள்ளி வீசுவதையும் தனது பொழுதுபோக்காக வைத்திருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். ஆளுநர் மாளிகையை "கமலாலயம்" ஆக மாற்றி, தான் இருப்பது ஆளுநர் பதவி என்பதையே மறந்து செயல்படும் ஆளுநர் ரவி போன்ற ஆளுநர்கள் அந்தப் பதவிக்கு தினந்தோறும் இழுக்கு தேடி வருவது கவலையளிக்கிறது.

தி.மு.க ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. 'போதையில்லா தமிழ்நாட்டை' உருவாக்க நேர்மையான நடவடிக்கைகளை எங்கள் முதலமைச்சரே முன்னின்று தொடர்ந்து எடுத்து வருகிறார். வரலாற்றிலேயே முதன்முறையாகப் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைக்காக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மூத்த



காவல் துறை அதிகாரிகளின் முதல் மாநில மாநாட்டை 2022 ஆகஸ்ட் 10-ஆம் நாள் முதலமைச்சர் அவர்கள் நடத்தினார். இப்படியொரு மாநாட்டை அ.தி.மு.க. ஆட்சியில் நடத்தவே இல்லை! தி.மு.க. ஆட்சியில் கடந்த மூன்றாண்டுகளில் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளால், இன்றைக்கு போதைப் பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.

**அரசியல்வாதியாக இருப்பதால் தெரிந்திருக்க நியாயமில்லை!**

ஆளுநர் அவர்கள் முழுநேர அரசியல்வாதியாக இருப்பதால் நிர்வாகத்தில் நடப்பது தெரிந்திருக்க நியாயமில்லை. ஆகவே தமிழ்நாட்டில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை எப்படி எடுக்கப்படுகிறது என்பதை சுருக்கமாக கூறி தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு சிஐடி (NIB CID) தமிழ்நாடு முழுவதும் 15 இடங்களில் செயல்படுகிறது. போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு மற்றும் கடத்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக NIB CID நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் (NCB) நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கிறது NIB CID. கஞ்சா செடிகளை பயிரிடுதல் மற்றும் விற்பனை செய்தல், இதர சட்ட விரோத மருந்துகளை தயாரித்தல் போன்றவை தொடர்பான தகவல்களை NCB பகிர்ந்து கொள்கிறது. போதைப் பொருள் தடுப்பு முயற்சிகளின் வரம்பை விரிவுபடுத்த NIB CID-யுடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவும் இணைந்து செயல்பட அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இவை தவிர மாநிலத்தில் உள்ள 1368 சட்டம் - ஒழுங்குக் காவல் நிலையங்கள் மற்றும் மாவட்ட/மாநகரங்களில் உள்ள 100 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகளும் போதைப் பொருள் தடை சட்டத்தை அமல்படுத்த அதிகாரம் பெற்றுள்ளன. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் 42 கடற்சார் காவல் நிலையங்கள், 24 நவீன உயர் சக்தி இயந்திரப் படகுகள் வழங்கப்பட்டு கடற்கரை வழியாக போதைப் பொருள்கள் கடத்தலை கூர்ந்து கவனித்து தடுத்து வருகிறது. காவல் துறையின் கடுமையான நடவடிக்கையால் தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடப்படுவது அறவே ஒழிக்கப்பட்டு 'பூஜ்ஜிய சாகுபடி' என்ற நிலையை எட்டியிருக்கிறோம்.

**வசதிக்கேற்ப மறந்துவிடும் ஆளுநர்!**

போதை பொருட்கள் தடுப்பு சட்டத்தின்கீழ் 2022-ஆம் ஆண்டு 10,665 வழக்குகள் போடப்பட்டன. 19 வெளிநாட்டினர் உட்பட 14,934 பேர் கைது செய்யப்பட்டனர். 28,383 கிலோ கஞ்சா, 63,848 மாத்திரைகள், 98 கிலோ இதர

தொடர்ச்சி 4ஆம் பக்கம்